Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 | வாசல் 01 | சனிக்கிழமை | செப்ரெம்பர் 26, 2020


## தியாக தீபத்திற்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட
# உணவு ஒறுப்பு நிறைவுக்கு வந்தது



தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அரசு நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் 8 மணித்தியாலங்களின் பின் நிறைவுக்கு வந்தது.

சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் இந்தப் போராட்டம் 02

## அரச மரியாதையுடன் எஸ்.பியின் இறுதிச் சடங்கு



புரோகிதர்கள் மந்திரங்கள் ஓத பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் உடலுக்கு அவரது மகன் சரன் இறுதிச் சடங்குகளை செய்தார்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் பண்ணைத் தோட்டத்திலுள்ள அவரது இல்லத்தில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பாடகர் எஸ். பி.பாலசுப்பிரமணியத்தின் உடல் அரச மரியாதையுடன், நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது 02

## நாட்டின் அமைதிக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியம்!





அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவம் ஆகிய தமிழர்களின் எதிர்பார்ப்புகளை புரிந்துகொண்டு அரசியலமைப்பு விதிகளை நடைமுறைப்படுத்தி வளர்க்கப்பட்ட நல்லிணக்கத்தை அடையவேண்டும் என்று இலங்கையின் புதிய அரசுக்கு மோடி அழைப்பு விடுத்தார்.

இன்று நடைபெற்ற முதலாவது இந்திய - இலங்கை மெய்நிகர் (காணொலி தொழில்நுட்பத்தில்) இருதரப்பு உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் இந்த கருத்துக்களை தெரிவித்தார். அண்டை நாடுகளுடன் இந்தியாவின் முதல் உச்சிமாநாடு இதுவாகும்.

இந்த மாநாட்டில் இரு தலைவர்களும் 02



## உணவு ஒறுப்பு போராட்ட களத்தில்
# தியாக தீபத்திற்கு அஞ்சலி

இந்திய- இலங்கை அரசுகளிடம் நீதி கேட்டு, ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உணவு ஒறுப்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 33ஆம் ஆண்டு நிறைவு இன்றாகும்.

நல்லூர் கந்தன் ஆலய வடக்கு வீதியில் 12 நாள்கள் உணவு ஒறுப்பிலிருந்த தியாக தீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் நாள் காலை 10.48 மணியளவில் வீரச்சாவை தழுவினார்.

அவரது உயிர் பிரிந்த 10.48 மணிக்கு யாழ்ப்பாணத்தில் 02

## உணவு தவிர்ப்பு போராட்டத்தில் பல்கலை மாணவரும் இணைவு



தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகளை அரசு நிறுத்தவேண்டும் என்று கோரி ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கொண்டனர்.

போராட்ட இடத்தில் கண்காணிப்புக் கடமையிலிருக்கும் பொலிஸார், மாணவர்களை போராட்ட இடத்துக்கு 02

## ஆனையிறவில் திடீர் பதிவு நடவடிக்கை




திலீபனின் நினைவு நாளின் இறுதி நாளான இன்று, கிளிநொச்சி - ஆனையிறவில் இன்று (26) காலை தொடக்கம் பதிவு நடவடிக்கைகள் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

பஸ் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டே தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகின்றது.

## உண்ணாவிரதம் இருக்க 20 பேருக்கு தடை

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தியாகி திலீபன் நினைவாக அஞ்சலி அல்லது உண்ணாவிரத போராட்டங்களை நடத்தக்கூடாது என 20 பேருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் கட்டளை 02

# ரொக் மீது வாள்வெட்டு
## யாழ்.பெருமாள் கோவிலடியில் நண்பகல் சம்பவம்



மானிப்பாயைச் சேர்ந்த தனு ரொக் என்ற இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு முன்பாக மணிக்கூட்டு வீதியில் இன்று நண்பகல் இந்த வாள்வெட்டு வன்முறை இடம்பெற்றுள்ளது. 02

# நான் சொன்னதே சட்டம்



பொதுமக்களின் நன்மைக்காக நான் வாய்மூலம் பிறப்பிக்கும் உத்தரவுகளை சுற்றுநிருபங்களாக கருதுங்கள் என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனை புறக்கணிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதுளை ஹல்துமுல்லவில் உள்ள 02

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்று இரவு அதிகரித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 349 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ந்தும் 150 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவு ஒறுப்பு போராட்டத்தின் சில பதிவுகள்...





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரச மரியாதையுடன்...

பண்ணைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொரோனா தொற்று காரணமாக சென்னை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னணிப் பாடகர் எஸ்.பி.பி, அதில் இருந்து மீண்ட நிலையில், திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு, நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 1.04 மணிக்கு காலமானார்.

அதனைத் தொடர்ந்து அவரது உடல், சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது வீட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு, ஏராளமான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மேலும், எஸ்.பி.பி. உடல் இறுதிச் சடங்கிற்காக, திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கத்திற்கு இன்று எடுத்துச் செல்லத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இரசிகர்கள் அஞ்சலி செலுத்த திரண்டதால் கொரோனா தொற்று அபாயம் உள்ளதாகக் கருதி நேற்று மாலையே அவரது உடல் தாமரைப்பாக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எஸ்.பி.பி. மறைவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், தி.மு.க. தலைவர் ஸ்டாலின், நடிகர்கள் ரஜினிகாந்த், கமலஹாசன், இசையமைப்பாளர் இளையராஜா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உண்ணாவிரதம்...

பிறப்பித்துள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வி.மணிவண்ணன், வ.பார்த்தீபன், கி.கிருஸ்ணமேனன், கே.பிருந்தாபன், இ.ஆனோல்ட், க.சுகாஷ், த.காண்டீபன், ராகவன் யதுர், கனகசபை விஷ்ணுகாந்தன், பொன் குணகரட்ணம், அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், இ.ரவிசங்கர், நிஷாந்தன், வாசுகி சுதாகரன் உள்ளிட்ட 20 பேருக்கு இந்த கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

### நான் சொன்னதே சட்டம்...

வெலன்விட்ட கிராமமக்களைசந்தித்து உரையாடுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்டு அவற்றிற்கு தீர்வை அரச அதிகாரிகள் முன்வைக்கவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மக்களின் சார்பில் உறுதியான சரியான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களுக்கு எனது முழுமையான ஆதரவை வழங்குவேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு அரசஅலுவலகங்கள் நீண்டகாலத்தை எடுக்கின்றன என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### உணவு ஒறுப்பு...

அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

சாவகச்சேரி சிவன் கோவில் முன்றலில் இடம் பெறும் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்திலே இவ்வாறு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நடத்த தமிழர் தாயகத்தில் இம்முறை பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்றத் தடையும் பொலிஸாரால் பெறப்பட்டது.

இந்த நிலையிலே இவ்வாறு அஞ்சலி செலுத்தப்பட்டது.

### உண்ணா தவிர்ப்பு...

அனுமதியளிக்க மறுத்தனர். எனினும் மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா பொலிஸாருக்கு விடயத்தை எடுத்துக் கூறியதன் அடிப்படையில் பின்னர் அனுமதித்தனர்.

சாவகச்சேரி சிவன் ஆலய முன்றலில் இன்று காலை 9 மணி தொடக்கம் இடம்பெற்று வரும் இந்தப் போராட்டத்தில் பலரும் பங்கேற்றுள்ளனர்.

### ரொக் மீது வாள்வெட்டு...

காரில் வந்த வன்முறைக் கும்பல் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வளால் வெட்டிவிட்டு அந்த இடத்திலிலிருந்து தப்பித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த தனுரொக் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### நாட்டின் அமைதிக்கு...

மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

தற்போதுள்ள இருதரப்பு வழிமுறைகள் மூலம் மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தற்போதைய ஆக்கபூர்வமான மற்றும் மனிதாபிமான அணுகுமுறையைத் தொடரவும் வலுப்படுத்தவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். இது குறித்து இரு தரப்பிலும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு இரு நாட்டுப் பிரதமர்களும் அறிவுறுத்தினர்.

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுண கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மீண்டும் பிரதமராகத் தேர்தெடுக்கப்பட்ட பின்னர் வெளிநாட்டுத் தலைவருடனான தனது முதல் இருதரப்பு சந்திப்பு இது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா-இலங்கை ஈடுபாட்டை புதிய உயரத்திற்கு கொண்டு செல்ல தனது தலைமையிலான கூட்டணியால் பெறப்பட்ட வலுவான 2/3 பெரும்பான்மையால் வழங்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்த பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்தினார்.

நீண்டகால நாகரிக தொடர்புகள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கு சாட்சியமளித்த பிரதமர் மோடி, இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை அறிவித்தார்.

### தியாக தீபத்துக்காக...

இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டம் மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது.

தியாக தீபம் திலீபன் உயிர்க்கொடை வழங்கிய நாளான இன்றைய தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நடத்த தமிழர் தாயகத்தில் இம்முறை பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்றத் தடையும் பொலிஸாரால் பெறப்பட்டது.

இந் நிலையில் நினைவேந்தல்கள் நடத்துவது தமிழ் மக்களின் உரிமையாகும், அதனைத் தடுக்கக் கூடாது என்று வலியுறுத்தி தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு கடந்தவாரம் கடிதம் அனிப்பியிருந்தன. எனினும் ஜனாதிபதி அதற்கு பதிலளிக்காத நிலையில் நினைவேந்தல் தடை நீடிக்கப்பட்டது.

அதனையடுத்து தமிழ் மக்களை அடக்குமுறைக்கு உள்படுத்துவதை அரசு நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகள் இன்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியது.

இந்தப் போராட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா சிறப்பு உரையாற்றினார்.



## எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய ஈழவிடுதலை பாடல்கள்

1. பொங்கியெழுகின்ற கடலலையே....
(புயல் அடித்த தேசம் இறுவட்டு)
2. அது யார் அழுகையோ ....
(கார்த்திகை 27 இறுவட்டு)
3. அள்ளித்தின்று அ எழுதிய மண்ணை கடக்கின்றோம் ....
(எல்லாளன் பெயர் சொல்லி இறுவட்டு)
4. வானத்திலேறியே வந்து வந்து போட்டவன் கோட்டையிலே...
(எல்லாளன் பெயர் சொல்லி இறுவட்டு)
5. தாயக மண்ணே உன்னை ....
(எல்லாளன் திரைப்படம்)
6. பூகம்பத்தின் மேகத்திலே ....
(புயல் அடித்த தேசம் இறுவட்டு)
7. ஏன் இந்த பேதம் எப்போது தீரும் ....
(புயல் அடித்த தேசம் இறுவட்டு)
8. உலக மனிதம் தலைகள் நிமிரும்
(எங்களின் கடல் இறுவட்டு)

## வீடு புகுந்து 20 பவுண் நகைகள் கொள்ளை 17 வயது இளைஞன் கைது:

### குருநகரில் சம்பவம்

குருநகரில் வீட்டில் யாரும் இல்லாத போது, வீடுடைத்து 20 பவுண் தங்க நகைகளும் 35 ஆயிரம் ரூபாய் பணமும் கொள்ளையிட்ட 17 வயது இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் நகைகளை வாங்கி அடகு வைத்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், கொள்ளையடித்த நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 17ஆம் திகதி முற்பகல் இடம்பெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் வேலைக்குச் சென்றிருந்த வேளை, வீடுடைத்து நகைகள் கொள்ளையிடப்பட்டன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

திருநகரைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொள்ளையிட்ட நகைகளை அடகு வைத்துக் கொடுத்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரும் நாளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## யாழில் தங்கத்தின் விலை ஆயிரம் ரூபாவால் உயர்வு



யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை இன்று பவுணுக்கு ஆயிரம் ரூபாயால் உயர்வடைந்துள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் சரிவைக் கண்ட தங்கத்தின் விலை வார இறுதியில் ஏற்றத்தைக் கண்டுள்ளது.

அமெரிக்க டொலரின் மதிப்பு நன்றாக இருப்பது, தங்க விலையை குறைத்துள்ளது. ஆனாலும், கோரோனா வைரஸ் பரவல் மற்றும் உலகளாவிய பொருளாதார மந்தம் போன்றவை, தங்கத்தின் மீது முதலீடு செய்வதை பாதுகாப்பாக உணரச் செய்கிறது. எனவே தங்கத்தின் விலை அதிகரித்துச் செல்லும் என்று பொருளியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இன்று (செப். 26) ஒரு பவுண் (22 கரட்) ஆபரணத் தங்கத்தின் விலை 90 ஆயிரத்து 750 ரூபாயாக அதிகரித்துள்ளது ஆபரணத் தங்கத்தைப் போலவே தூய தங்கத்தின் விலையும் இன்று உயர்த்தப்பட்டுள்ளது. 24 கேரட் தூய தங்கத்தின் விலை பவுணுக்கு ஆயிரம் ரூபா உயர்ந்துள்ளது.

8 கிராம் தூய தங்கத்தின் விலை ஒரு லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

## கனகராயன்குளத்தில் விபத்து ஒருவர் பலி




கொழும்பிலிருந்து - யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் பேருந்து மோதியதில் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இரவு கனகராயன்குளம் - கொல்லர் புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது. பிரதான வீதியால் நடந்து சென்றவர் மீது பேருந்து மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

அதில் படுகாயமடைந்த அவர் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த சந்தணகுமார (வயது 41) என்ற நபரே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் கனகராயன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று...



முழங்கால் மண்டியிட்டு தியாக தீபத்திற்கு அஞ்சலி

## ரஷ்ய நாட்டவரை நாட்டிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை



கொவிட் 19 வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட ரஷ்ய நாட்டவரை இன்றைய தினம் அவரின் தாயகம் நோக்கி அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மாத்தறை - பொல்ஹேன பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ரஷ்ய நாட்டவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகத்தின் பேரில் அவர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

எவ்வாறாயினும் நேற்று (25) மாலை மேற்கொள்ளப்பட்ட இறுதி பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அதேபோல், இதுவரையான காலப் பகுதியில் , சுமார் 45000 நபர்கள் தனிமைப்படுத்தலின் பின்பு வெளியேறியுள்ளனர்.

முப்படையினரால் நிருவகித்து வரும் 68 தனிமைப்படுத்தல் மையங்களில் 6991 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று (24) திகதிக்குள் நாடாளாவிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 1300 ஆகும். இதுவரை நாடாளாவிய ரீதியாக நடாத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 278,145.ஆகும் என கொவிட் மையம் தெரிவித்துள்ளது.





தியாக தீபம் திலீபன் நினைவு நாளை முன்னிட்டு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெற்ற அடையாள உண்ணாவிரத போராட்டம்.

# மேல் மாகாணத்தில் 400 பேர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 400க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 300 பேர் போதைக் பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 143 பேரிடம் இருந்து 108 கிராம் ஹெரோயினை கைபற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பொரளை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது 36 கிராம் கொக்கேய்ன் போதைப் பொருளுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொரோனாவில் இருந்து பூரண குணமடைந்த 28 பேர் வீடு திரும்பினர்

இலங்கையில் மேலும் 28 பேர் கொரோனா வைரஸில் இருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு இன்று (26) சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,186 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில்இதுவரை 3,345 பேர்கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன் அவர்களுள் 146 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை (கொவிட் 19) தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பளை வைத்தியசாலை புற்றுநோய்ப்பிரிவை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவர பேச்சுவார்த்தை



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை சுகாதார அமைச்சை மத்திய சுகாதரா அமைச்சின் கீழ் மாற்றுவது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று 25.09.2020 நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் புற்றுநோய் பிரிவு தலைமைப் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், வடமாகாண பிரதம செயலாளர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை துறைசார் அதிகாரிகள் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலைத் துறைசார் வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் புற்றுநோய் பிரிவை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் க்கு மாற்றுவது தொடர்பில் ஏற்படக்கூடிய சாதக, பாதக தன்மைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

# தேங்காய்க்கு நிர்ணய விலை



தேங்காய் ஒன்றின் அதிகூடிய விலையாக 60 ரூபாய் தொடக்கம் 70 ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த விலை நிர்ணயம் இன்று (செப். 25) தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு ஊடாக இந்த விலை நிர்ணயம் இன்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் நிலையில் பெருந்தோட்டத்துறை அமைச்சுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின் தேங்காய்க்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.



# திலீபன் படம் இருந்த பத்திரிகை பறிப்பு !

பத்திரிகையின் முன்பக்கத்தில் தியாகி திலீபனின் படம் இருந்ததை அவதானித்த பொலிஸார் அதனைப் பறித்தெடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து சாவகச்சேரி சிவன் கோயில் முன்றலில் உணவுத் தவிர்ப்புப் போராட்டதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் பத்திரிகை ஒன்றினை வாசித்துக் கொண்டிருந்தார். அந்தப் பத்திரிகையின் முன்பக்கத்தில் தியாகி திலீபனின் படம் இருந்தது.

அப்போது வந்த பொலிஸார் உத்தியோகத்தர் அந்தப் பத்திரிகையினை பறித்துச் சென்றார். இதையடுத்து, அருகில் இருந்தவர்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டதன் பின்னர் பத்திரிகையை பொலிஸ் உத்தியோகத்தர் திரும்பக் கொடுத்தார்.

# நியூ டெமோண்ட் தீ விபத்து 442 மில்லியன் நட்ட ஈடு வழங்க முடிவு



கப்பலுக்கு சொந்தமான நிறுவனம் 442 மில்லியன் ரூபாவை நட்ட ஈடாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடல் எல்லையில் தீப்பற்றி விபத்திற்குள்ளான ஆவு NEW DIAMOND கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்திடம் கோரப்பட்டிருந்த 442 மில்லியன் ரூபா முழுமையான நட்ட ஈட்டுத் தொகையை விரைவில் வழங்க அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்தின் சட்டத் தரணிகள் இதுகுறித்து அறிவித்துள்ளதாக சட்டத்தரணியின் இணைப்பாளரான அரச தரப்பு சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்ட கட்டணத் தொகையாக இதற்கு முன்னர் நீதிபதியினால் 340 மில்லியன் ரூபா மதிப்பீடாக முன்வைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் இறுதியான மதிப்பீடு அண்மையில் இடம்பெற்ற போது, மேலும் 100 மில்லியன் உள்ளடக்கப்பட்டு 442 மில்லியன் ரூபா நட்டஈட்டுத் தொகையாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.